செ.வெ.எண்:16 நாள்: 08.09.2020

# அரியலூர் மாவட்டம்
# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் வாட்ஸ்ஆப் குறுஞ்செய்தி மூலமாகவும் தங்களது கோரிக்கை மனுக்களை அளிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் **"மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்"** (07.09.2020) அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் இணையதளம் வாயிலாக காணொளிக்காட்சி மூலம் நடைபெற்றது இதில் பல்வேறு கோரிக்கைகள் குறித்து இணையதளம் வாயிலாக காணொளியின் மூலம் பொதுமக்கள் தங்களது இல்லங்களில் இருந்தே கோரிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் தெரிவித்தார்கள். மேற்படி மனுதாரர்களின் மனு குறித்து சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உடன் தெரிவிக்கப்பட்டு ஒருவாரத்திற்குள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரருக்கு தெரிவிக்க மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் இனிவரும் பிரதி திங்கட்கிழமைகளில் அரியலூர் மாவட்ட இணைய தள முகவரி (https://ariyalur.nic.in)-ல் கூகுள் மீட் (Google Meet) ற்கான இணைப்பு கொடுக்கப்படும். மேற்படி இணைப்பில் சென்று பொதுமக்கள் தங்கள் இல்லத்தில் இருந்தே நவீன கைபேசி (Smart Phone) மற்றும் இணையதள வசதி கொண்ட மடிக்கணினி (Laptop) அல்லது கணிப்பொறி (Computer) வாயிலாகவும், மேற்படி இணையதள இணைப்பு கிடைக்க பெறாத பொதுமக்கள் அலைபேசி எண் **9445461730 என்ற வாட்ஸ்ஆப் (WhatsApp)-ற்கு குறுச்செய்தி மூலமாகவும்** தங்களது கோரிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்கலாம்.

**காலை 10.00 மணி முதல் 10.30 மணி வரை மாற்றுத்திறனாளிகள் தங்களது கோரிக்கை குறித்து தெரிவிக்கவும்,** 10.30 மணி முதல் 1.00 மணி வரை பொதுமக்கள் தங்களது கோரிக்கைகள் குறித்தும் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** தெரிவித்துள்ளார்கள்

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**